**சமூக நல ஆணையரக கூடுதல் இயக்குநர் (நிருவாகம்) சென்னை-5 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்,**
**முன்னிலை : திருமதி.க.ஜெயலட்சுமி,M.A.,M.Phil.,**

செ.மு.ந.க.எண். 491739 / நிரு.4(1) / 2024

நாள்: 08.01.2025

பொருள்: பணியமைப்பு - சமூக நல ஆணையரகம், சென்னை-05 ப.பைரோஸ் பேகம், இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், குன்றாண்டார் கோவில் வட்டாரம், புதுக்கோட்டை மாவட்டம் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.1978/PSD-C2/2023, நாள்.23.08.2023.
2. சமூக நல ஆணையர், சென்னை-15 அவர்களின் செ.மு.ந.க.எண். 24975 / நிரு.4(3) / 2023, நாள்.15.09.2023.
3. மாவட்ட திட்ட அலுவலர், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் ந.க.எண். 1418 / அ1 / 2024, நாள். 05.11.2024.

<<<<>>>>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் ப. பைரோஸ் பேகம் என்பவருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 28 (1)-ன் படி இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 27.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தொகுதி IV தேர்வு மூலம் நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்பிற்குட்பட்டு (நீதிப்பேராணைக்குட்பட்டு) பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

ப. பைரோஸ் பேகம், இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு : பணிப்பதிவேடு அசல்

ஒம்/- க.ஜெயலட்சுமி
கூடுதல் இயக்குநர்
நிருவாகம்

பெறுநர்
ப. பைரோஸ் பேகம், இளநிலை உதவியாளர்,
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், குன்றாண்டார்கோவில் வட்டாரம்,
புதுக்கோட்டை மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)

நகல்
1. மாவட்ட திட்ட அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம்.
(மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)
2. கு.வ.தி.அ, குன்றாண்டார் கோவில் வட்டாரம், புதுக்கோட்டை மாவட்டம்.
3. இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி //

ஒ. உஷா கன்னி 9/1/25
நிருவாக அலுவலர் (மு.கூ.பொ)

09/01/2025